**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC.30/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | கவியரசன் | Prosecution | LW- 2 as PW1 |
| Father Name | கண்ணாயிரம் | Defence | |
| Village | வெட்டந்தாங்கரை | Taluk | Sirkali |
| Calling | | Age | 35/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha Grade III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day 02.06.2025. சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி ஆஜரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து தனியார் பேருந்தில் நடத்துனராக பணிபுரிகிறேன். பட்டியல் சாட்சி 1 கண்ணாயிரம் என்பவர் எனது தந்தை ஆவார். பட்டியல் சாட்சி தாமரைச்செல்வி என்னுடைய மனைவி ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். 1வது எதிரி செந்தில் முருகன் எனது தாய் மாமன் ஆவார். 2வது எதிரி சின்ன பிள்ளை என்னுடைய தாய் வழி பாட்டியாவார். கடந்த 26.05.2022ம் தேதி காலை 6.00 மணியளவில், எனது தம்பி கண்ணதாசன் என்பவருக்கு திருமணம் செய்ய பந்தக்கால் நடுவதற்காக எனது மாமன் செந்தில் முருகன், எனது தம்பி மற்றும் சில உறவினர்கள் எனது வீட்டிற்கு வந்திருந்தார்கள்.

2. அப்போது எனது தந்தை, எனது மாமனிடம் 'நீங்கள் யார் எனது மகனுக்கு திருமணம் செய்து வைக்க?' என்று கேட்டபோது, 1வது எதிரி கீழே கிடந்த செங்கல்லால் எனது தந்தையை தாக்கினார். எனது தம்பி கண்ணதாசனுக்கு, என்னுடைய தந்தையின் சம்மதமின்றி இவ்வழக்கின் எதிரிகள் அவர்களாகவே ஒரு பெண்ணை பார்த்து திருமணத்திற்கு ஏற்பாடு செய்து விட்டனர். அதனால் என் தந்தை மேற் சொன்னவாறு என் மாமாவிடம் கேட்க அதன் காரணமாக அவர் கோபம் கொண்டு என் தந்தையை தாக்கிவிட்டார்.

3. அதன் பிறகு எனது தந்தையை சிகிச்சைக்காக நானும் என் மனைவியும் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால், குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்து வைக்கப்பட்டது.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**

**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC.30/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | தாமரைச்செல்வி | Prosecution | LW- 3 as PW 2 |
| Father Name | சந்திரகாசு | Defence | |
| Village | வெட்டந்தாங்கரை | Taluk | Sirkali |
| Calling | | Age | 35/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha Grade III Bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day 02.06.2025. சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி ஆஜரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 1 கண்ணாயிரம் என்பவர் எனது மாமனார் ஆவார். அசா.1 என்னுடைய கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். எனது வீட்டில் சண்டை நடந்த போது அவர்கள் அங்கு இருந்தார்கள். கடந்த 26.05.2022ம் தேதி காலை 6.00 மணியளவில், எனது கணவரின் தம்பி கண்ணதாசன் என்பவருக்கு திருமணம் செய்ய பந்தக்கால் நடுவதற்காக எனது கணவரின் மாமன் செந்தில் முருகன், மற்றும் சில உறவினர்கள் எனது வீட்டிற்கு வந்திருந்தார்கள்.

2. அப்போது எனது மாமனார், எனது கணவரின் மாமனிடம் 'நீங்கள் யார் எனது மகனுக்கு திருமணம் செய்து வைக்க?' என்று கேட்டபோது, 1வது எதிரி கீழே கிடந்த செங்கல்லால் எனது மாமனாரை தலையில் தாக்கினார். எனது கணவரின் தம்பி கண்ணதாசனுக்கு, என்னுடைய மாமனாரின் சம்மதமின்றி இவ்வழக்கின் எதிரிகள் அவர்களாகவே ஒரு பெண்ணை பார்த்து திருமணத்திற்கு ஏற்பாடு செய்து விட்டனர். அதனால் என் மாமானார் மேற் சொன்னவாறு என் கணவரின் மாமாவிடம் கேட்க அதன் காரணமாக அவர் கோபம் கொண்டு என் தந்தையை தாக்கிவிட்டார்.

3. அதன் பிறகு எனது மாமனாரை சிகிச்சைக்காக நானும் என் கணவரும் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால், குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்து வைக்கப்பட்டது.